# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 151 | வெள்ளிக்கிழமை Friday | 28.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழர்களை மீட்க ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் அரசு குழு

## முதலமைச்சர் விஜய் உத்தரவு




சென்னை:
நேபாள வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள தமிழர்களை விரைந்து மீட்கும் வகையில், புதுடெல்லி தமிழக இல்ல உள்ளுறை ஆணையர் தலைமையிலான குழுவை நேபாளத்துக்கு அனுப்ப முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று, நேபாள நாட்டின் ரசுவா மாவட்டத்தில் உள்ள போடே கோசி ஆற்றில் ஏற்பட்ட திடீர் பெருவெள்ளத்தின் காரணமாக, அந்நாட்டுக்கு சுற்றுலா சென்று அங்கு சிக்கியுள்ள தமிழர்களை மீட்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேபாள நாட்டுக்கு தமிழகத்தைச் சேர்ந்த 103 நபர்கள் கைலாஷ் யாத்திரைக்காகஇரண்டு குழுக்களாகச் சென்றுள்ளனர். அதில் முதல் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த 54 நபர்களும், புதுச்சேரியைச் சேர்ந்த 3 நபர்களும்எனமொத்தம் 57 நபர்களும் இரண்டாவது குழுவில்தமிழ்நாட்டைச் சேர்ந்த 49 நபர்களும் இடம்பெற்றிந்தனர். இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் தமிழர்கள் உட்பட பலர் காணாமல் போனதாகக் கிடைக்கப்பெற்றதகவல்களின் அடிப்படையில், அங்கு சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தில் உள்ள அவர்களது உறவினர்கள் தொடர்பு கொள்ள ஏதுவாகவும் அவசர தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டன.

மேலும், இப்பேரிடரில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை, நேபாள நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம், புதுடெல்லியிலுள்ள தமிழகஇல்லஅரசு உயர் அலுவலர்கள் மற்றும் பயண முகவர் நிறுவனங்களின் (Travel Agencies) உதவியுடன் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், முதல்வர் விஜய்,தமிழர்களை மீட்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் வகையில், புதுடெல்லி தமிழக இல்ல உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் தலைமையிலான குழுவினர் நேபாள நாட்டிற்கு நேரில் சென்று மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்திட உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மீட்கப்பட்டுள்ள 20 தமிழர்களை உடனடியாக தாயகம் அழைத்து வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்திடவும்,

மேலும் தொடர்பு கொள்ள இயலாதவர்களின் நிலையினைக் கண்டறிந்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்திடவும், தேவையான மருத்துவ உதவிகளை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் க. தென்னரசு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் ர. வினோத் மற்றும் அயலகத் தமிழர்நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை இயக்குநர் ரெ. சதீஸ் ஆகியோர் புதுடெல்லியிலுள்ள தமிழக இல்லத்தில் முகாமிட்டு, மீட்புப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவர்.

அதோடு, நேபாளத்திலிருந்து மீட்கப்பட்டதமிழர்களுக்குத் தேவையானமருத்துவஉதவிகள் மற்றும் உளவியல் ஆலோசனைகளை மருத்துவக் குழுவினர் மூலம் வழங்கிடவும், அவர்களைப் பத்திரமாக தமிழகத்துக்குஅழைத்து வருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கும்பகோணத்தில் இருந்து நேபாளத்துக்கு சுற்றுலா சென்றவர்களில் இதுவரை 21 பேர் மீட்பு

# "300 இந்தியர்கள் உட்பட சுமார் 1000 பேரை காணவில்லை"

## நேபாள வெளியுறவு அமைச்சர் தகவல்



காட்மாண்டு: நேபாளத்தில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில், அங்கு சுற்றுலாவுக்கு வந்திருந்த 300 இந்தியர்கள் உட்பட சுமார் 1000 பேரை காணவில்லை என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஷிஷிர் கனால் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் வடக்கு எல்லையான ரசுவா மாவட் டத்தில், இமயமலைப்பகுதிகளில்பனிமலைகள் உடைப்பு காரணமாக கோசி, திரிசூலி நதிகளில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பெருக்கில் சிக்கி 175 பேர் உயிரிழந்துள்ளனர். 300 இந்தியர்கள் உட்பட சுமார் ஆயிரம் பேரை காணவில்லை என கூறப்படுகிறது.

இது தொடர்பாக நேபாள நாட்டின் தூதரக வட்டாரங்கள் கூறுகையில், "இதுவரை 175 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. உள்ளூர் மக்கள் சுற்றுலாப் பயணிகள் உட்பட பலரை காணவில்லை. தற்போதைய தகவலின்படி, 28 நாடுகளைச் சேர்ந்த 476 பேரை காணவில்லை. இந்த எண்ணிக்கை ஆய்வுக்கு உட்பட்டது.

இந்த தருணத்தில், எங்கள் முன்னுரிமை என்பது உயிர்களைக் காப்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிப்பது, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதாகவே உள்ளது. இந்த வெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்து அரசு தொடர் ஆய்வை மேற்கொண்டு வருகிறது." எனத் தெரிவித்துள்ளன.

நேபாள வெள்ள பாதிப்பு தொடர்பாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஷிஷிர் கனால் கூறுகையில், "ரசுவா பகுதியில் இந்த துயரச் சம்பவத்தில் 160 பேர் உயிரிழந்துள்ளனர், ஆயிரக்கணக்கானோர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளன. தற்போது அவர்களில்பலர்காணாமால் போயுள்ளனர். இந்த பேரிடரின் முழு அளவை நாங்கள் மதிப்பீடு செய்து வருகிறோம்.


இந்த திடீர் வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 300 இந்தியர்கள் - இவர்களில் பெரும்பாலானோர் மானசரோவர் யாத்ரீகர்கள் - காணாமால் போயுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்களைத் தொடர்பு கொள்ள அரசாங்கம் முயன்று வருகிறது. வெளிநாட்டினரில் சுமார்500பேரைதொடர்பு கொள்ள முடியவில்லை.

நேபாள குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனில் நாங்கள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளோமோ அதே அளவு வெளிநாட்டினரின் பாதுகாப்பு மற்றும் நலனிலும் நாங்கள் அக்கறைகொண்டுள்ளோம். இந்திய அரசு ஏற்கனவே நிவாரண உதவிகளை அனுப்பியுள்ளது. நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த நெருக்கடியான நேரத்தில் நேபாளத்துக்கு துணை நிற்குமாறும், நாடு தன்னைத்தானேமீட்டெடுப்ப தொடர்ந்துஇங்குவருகை தருமாறும் நாங்கள் உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். உடனடி நிவாரண நடவடிக்கைகள் மட்டுமல்லாது, நேபாளத்துடன் உலகம் தொடர்ந்து இணைந்திருப்பதும்நாங்கள் மீண்டு வர மிக முக்கியம்.

கடந்த 2015ல் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்துக்குப் பிறகும் நாங்கள் வலிமையுடன் மீண்டு வந்தோம். நேபாளம் தன்னைத்தானே சீரமைத்துக்கொள்ளும்." என தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், "10 டன் எடையுள்ள மனிதாபிமான உதவிப்பொருட்கள் தூதர் ஸ்ரீவஸ்தவவால், நேபாளத்தின் சுற்றுலாத்துறை அமைச்சர் கடக் ராஜ் பவுலிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த உதவிப் பொருட்கள் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விவாரணநடவடிக்கைகளுக்கு உதவும். இந்தியா நேபாளத்துடன் உறுதியுடன் நிற்பதுடன், சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க உறுதிபூண்டுள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 37.5 டன் அளவிலான நிவாரணம் மற்றும் பேரிடர் பொருட்கள், மருந்துகள், உணவுப் பொட்டலங்களுடன் இரண்டாவது இந்திய விமானம் நேபாளத்துக்குபுறப்பட்டு உள்ளது.



# தங்கம் விலை ஒரே நாளில் 2வது முறையாக குறைந்தது...



தங்கம் விலை நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.160 குறைந்து ஒரு சவரன் ரூ.1,20,080-க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று தங்கம் விலையில் மாற்றமின்றி அதே விலையில் நீடித்தது.

தங்கம் விலை சவரனுக்கு ரூ.560-ம், கிராமுக்கு ரூ.70-ம் குறைந்து, ஒரு சவரன் ரூ.1,19,520-க்கும், ஒரு கிராம் ரூ.14,940-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில் ஒரே நாளில் 2-வது முறையாக தங்கம் விலை அதிரடியாக குறைந்து உள்ளது.

அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று பிற்பகலில் சவரனுக்கு ரூ.1,720 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,17,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.215 குறைந்து, ஒரு கிராம் 14,725-க்கு விற்பனை செய்யப்படுகிறது.இன்று ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,280 குறைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

தங்கத்தின் விலை குறைந்துள்ளநிலையில், வெள்ளி விலையில் இன்று எந்த மாற்றமும் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.265-க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,65,000-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

(ஆகஸ்ட்25)ஒருகிராம் வெள்ளி ரூ.265 ஆக இருந்த நிலையில், இன்றும்அதேவிலையில் தொடர்கிறது. ஆகஸ்ட் 24-ம் தேதி ஒரு கிராம் வெள்ளி ரூ.275 ஆக இருந்தது. அதிலிருந்து தற்போது ரூ.10 குறைந்த நிலையில் உள்ளது.

ஆகஸ்ட் 20-ம் தேதி ஒரு கிராம் வெள்ளி ரூ.260 ஆக இருந்த நிலையில், தற்போது ரூ.265 ஆக உள்ளது. இதன்படி, கடந்த ஆறு நாட்களில் ஒரு கிராம் வெள்ளியின் விலை ரூ.5 அதிகரித்துள்ளது.

தங்கம் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,280 குறைந்துள்ளதால், நகை வாங்கத் திட்டமிடுபவர்களுக்கு இன்றைய விலை நிலவரம் கவனிக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# குடியிருப்பு பகுதிகளில் அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்திய பள்ளி மாணவர்கள்



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள், தங்கள் குடியிருப்பு பகுதிகளில் பொதுமக்களுக்கு பூஜ்ஜிய நிழல் தினம் குறித்த அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

விடுமுறை காலமாக இருப்பதால், மாணவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே சுற்றுவட்டாரத்தில் உள்ள பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்களிடம் பூஜ்ஜிய நிழல் தினத்தின் அறிவியல் காரணங்களைவிளக்கினர்.திறந்த வெளியில் நின்றபோது சூரியக் கதிர்கள் நேரடியாககாலடியில் விழுந்து, அருகில் நிழல் தெரியாததை பொதுமக்களும் பெற்றோர்களும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

பூஜ்ஜிய நிழல் தினம் ஆண்டுக்கு இரண்டு முறை நிகழும். சூரியனின் தோற்றநிலை அட்சரேகைக்கு சமமாக அமையும் நேரத்தில், சூரியக் கதிர்கள் பொருட்களின்மீதுசெங்குத்தாக விழுவதால் அவற்றின் நிழல் அந்தப் பொருளின் அடிப்பகுதிக்குள் விழும். இதனால் வெளிப்புறமாக நிழல் தெரியாது. அந்தந்த பகுதியின் அட்சரேகைக்கு ஏற்ப பூஜ்ஜிய நிழல் தினத்தின் தேதி மாறுபடும்என்று மாணவர்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் முத்துலெட்சுமி,சிவரஞ்சனி,ஆர்த்தி,ஸ்ரீதர் ஆகியோர் விளக்கமளித்தனர்.மாணவிகள்ரித்திகா, நந்தனா, மாலினி, லேகாஸ்ரீ, ஸ்டெபி மற்றும் மாணவர் அசுவத் ஆகியோர் நடராஜபுரம் , திருவள்ளுவர் தெரு, சத்தியமூர்த்தி தெரு ஆகிய பகுதிகளில் தங்கள் வீடுகளின் அருகில் உருளை வடிவ பொருளை வைத்து பூஜ்ஜிய நிழல் நிகழ்வை செயல்விளக்கமாக செய்து பார்த்தனர். மேலும், தங்களுடன் படிக்கும் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதனை செய்து காண்பித்து, அதன் பின்னணியில் உள்ள அறிவியல் உண்மைகளை விளக்கினர். கட்டு கதைகளை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டனர். குறிப்பாக ஆகஸ்ட் மாதத்தில் இந்த நாளில் தேவகோட்டை பகுதியில் மதியம் 12.25 மணி அளவில் இந்த நிகழ்வு ஏற்படும் என்றும் விளக்கினார்கள்.

மாணவர்களின் இந்த முயற்சி குடியிருப்பு பகுதிகளில் அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன், அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளின் பின்னணியில் உள்ள அறிவியல் உண்மைகளை எளிய முறையில் புரிந்துகொள்ள பொதுமக்களுக்கு உதவியது.



மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பொது தகவல் அலுவலர்களுக்கான தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாநில தகவல் ஆணையர் வி.பி.ஆர்.இளம்பரிதி அவர்கள் தலைமையில் இன்று 27.8.26 நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், உடன் உள்ளார்.

# வேப்பூர் அருகே திருப்பெயர் கிராம மக்களின் புகார்களை நேரில் கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர்!



கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பல்வேறு பகுதிகளில் நேரில் ஆகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை களஆய்வு மேற்கொண்டார். கண்டப்பங்குறிச்சி கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டிருந்தபோது, திருப்பெயர்கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அங்கு வந்து, தங்கள் கிராமத்தில் நிலவும் அடிப்படை வசதிகள் குறைபாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டனர்.

மேலும், திருப்பெயர் கிராமத்தில் பொதுமக்கள் சந்தித்துவரும்பிரச்னைகளை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்ற மாவட்ட ஆட்சியர், அவர்களுடன் திருப்பெயர் கிராமத்துக்குச் சென்று பல்வேறு பகுதிகளில்நேரில்ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் குடிநீர், கழிவுநீர் வசதி, சாலை மற்றும் தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக செய்து தரப்படவில்லை என பொதுமக்கள் புகார்தெரிவித்தனர். நீண்டகாலமாக தங்களது கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே,ஊராட்சி செயலாளர் சொக்கலிங்கம் தங்களது பகுதியை புறக்கணித்து வருவதாகவும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உரிய செவிசாய்ப்பதில்லை என்றும் மாவட்ட ஆட்சியரிடம் அடுக்கடுக்கான புகார்களை முன்வைத்தனர். மேலும், ஊராட்சி நிர்வாகத்தில் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் குற்றம்சாட்டி, ஊராட்சி செயலாளர் மீது உரிய நடவடிக்கை எடுத்து அவரை மாற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளையும் கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர், தொடர்ந்து ஒவ்வொரு தெருவாகச் சென்று அப்பகுதியின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.பொதுமக்கள் தெரிவித்த குறைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் உறுதியளித்தார்.

# விருத்தாச்சலம் பெரியகோவிலில் ஓராண்டாக தொடரும் அன்னதான சேவை!



கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோவிலுக்குவரும்பக்தர்களின் பசியைப் போக்கும் நோக்கில், சமூக ஆர்வலர் எ. கொளப்பாக்கம் இளையராஜா சார்பில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக தொடர்ந்து அன்னதான அறப்பணி நடைபெற்று வருகிறது.


ஓம் சக்தி குரூப்ஸ் & ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ் மற்றும் நவீன நெல் அறுவடை இயந்திர சேவை ஆகிய நிறுவனங்களின் சார்பில், ஒவ்வொரு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் மூலம் கிடைக்கும் வருவாயில் சமூக நலன் மற்றும் ஆன்மிக சேவைக்காக பயன்படுத்தி, இப்பணியை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 26ஆம் தேதி நடைபெற்ற அன்னதான நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஓராண்டாக அன்னதான சேவையை மேற்கொண்டு வரும் இளையராஜாவின் மனிதநேய மற்றும் ஆன்மிகப் பணிக்கு பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.



தென்காசி மாவட்டம் துவரங்காடு ஊராட்சியில் கிணற்றில் தவறி விழுந்த பஞ்சாயத்து தெரு சேர்ந்த மாடசாமி மனைவி மூதாட்டி உடையம்மாள்(வயது65) சுமார் 30அடி ஆழமுள்ள கிணற்றில் இருந்து உயிருடன் பத்திரமாக மீட்ட சுரண்டை தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினர் இந்த மீட்பு பணியில் நிலைய அலுவலர் ரமேஷ் சிறப்பு நிலைய அலுவலர் ரவீந்திரன் வீரர்கள் திருமலை,கணேசன்,சமுத்திரபாண்டி,செல்வம் ஆகியோர் ஈடுபட்டனர். மூதாட்டியை உயிருடன் பத்திரமாக மீட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினரை பொதுமக்கள் பாராட்டினர்.

# சேப்பாக்கத்தில் 800 ஏக்கர் விளைநிலங்களை சிப்காட்டுக்கு கையகப்படுத்த எதிர்ப்பு



கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் சேப்பாக்கம் கிராமத்தில் சுமார் 800 ஏக்கர் விவசாய நிலங்களை சிப்காட் தொழிற்பேட்டைக்காக கையகப்படுத்தும் நடவடிக்கையை கைவிடக் கோரி, நில உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

இந்த நிலங்கள் பல குடும்பங்களின் முக்கிய வாழ்வாதாரமாக உள்ளன. இவற்றில் சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, எள், வரகு, பருத்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டால் விவசாயம், குடும்ப வருமானம், உணவுப் பாதுகாப்பு மற்றும் எதிர்கால தலைமுறைகளின்வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். சேப்பாக்கம் அருகிலுள்ள பெரியநெசலூர்-விளம்பாவூர் பகுதியில் ஏற்கனவே தொடங்கப்பட்ட சிப்காட் திட்டம் முழுமையாக பயன்பாட்டுக்கு வராத நிலையில், புதிய நிலங்களை கையகப்படுத்த வேண்டிய அவசியத்தை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். பயன்படுத்தப்படாததொழில்நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் மற்றும் விவசாயத்திற்கு பயன்படாத மாற்று நிலங்களை முதலில் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், நிலம் கையகப்படுத்துவதற்கு முன் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் விவசாய பாதிப்புகள் குறித்து முழுமையான ஆய்வு நடத்தி, நில உரிமையாளர்களுக்கு உரிய தகவல் வழங்கி, அவர்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகளை பதிவு செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. நில அளவீடு உள்ளிட்ட நடவடிக்கைகள் சட்டப்படி முன் அறிவிப்புடன் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

விவசாய நிலங்களை பாதுகாக்கும் வகையில் கையகப்படுத்தும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, பொதுமக்களுடன் கலந்தாய்வு நடத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர். இதே கோரிக்கை தொடர்பாக 10.08.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மனு அளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டப்பேரவை நேரலையில் மாற்றம் செய்ய திட்டம்: பேரவைத்தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தகவல்



சென்னை: நீக்கப்பட்ட பகுதிகள் இல்லாமல் சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரலையில் ஒளிபரப்புவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுவதாக பேரவைத் தலைவர் ஜேசிடி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் திமுக கொறடா ஏ.வ வேலு பேசும்போது, "சட்டப்பேரவை நிகழ்வுகள் முழுவதும் நேரலை செய்யப்படுவதால், அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்ற பகுதிகளை பத்திரிகைகள் போடாவிட்டாலும், சமூக வலைதளங்களில் பரவுகின்றன. இதனால் அவையின் மாண்பு போகிறது.

உரிமை மீறல் குழு அமைப்பதற்கு முன்பாக அவையில் நீங்கள் இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே 2 உரிமை மீறல் புகார்கள் அளித்துள்ளேன். அதை இப்போதே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதையே மதிக்கவில்லை என்றால் யார் சொன்னால் மதிப்பார்கள்? "என்றார்.

இதற்கு பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் பதிலளித்து பேசுகையில், "உறுப்பினர் கூறுவது ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். இன்னொரு கருத்தும் வந்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்காவில் நீக்கப்பட்ட அம்சங்கள் வெளியே வராமல் பேரவை நிகழ்வுகள் ஒளிப்பரப்பப்பட்டு வருகிறது.

அதேபோல், தமிழகத்திலும் நீக்கப்பட்ட பகுதிகள் இல்லாமல் நேரலை வழங்குவதற்காக ஆய்வு நடத்தப்படுகிறது. இந்த விவகாரத்தில் விரைவில் உரியநடவடிக்கைஎடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

# திண்டுக்கல் அருகே இரு வீட்டார் மோதலில் பெட்ரோல் குண்டு வீச்சு: 3 பேர் கைது



:திண்டுக்கல் அருகே இரு வீட்டார் இடையே ஏற்பட்ட மோதலில் பெட்ரோல் குண்டு வீசியதாக 3 பேரை போலீஸார் கைது செய்தனர். திண்டுக்கல் மேட்டுப்பட்டி பொன்னம்மாள் நகரை சேர்ந்த போஸ் மனைவி சைனி(40). இவரது வீட்டின் முன் நேற்று இரவு மர்ம நபர் ஒருவர் பாட்டிலில் பெட்ரோல் நிரப்பி தீ வைத்து மின் கம்பத்தில் வீசிவிட்டு தப்பி ஓடி விட்டார். இதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார், டிஎஸ்பி. சங்கர், இன்ஸ்பெக்டர் உலகநாதன் ஆகியோர் நிகழ்விடத்துக்குச்சென்று விசாரணை நடத்தினர். தில், பக்கத்து வீட்டை சேர்ந்த ராபின், வீட்டின் ஜன்னல் வழியாக சைனி உறங்குவதை எட்டிப் பார்த்ததால், இரு வீட்டாருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு இரு வீட்டாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ராபின்(29), அவரது தம்பி சூர்யா ஆகியோர் மறைத்து வைத்திருந்த பெட்ரோல் நிரப்பிய பாட்டிலை தீ வைத்து சைனி வீட்டின் மீது வீசியுள்ளனர்.

அது அருகேயுள்ள மின் கம்பத்தில் பட்டு சிதறியது. இதுகுறித்து தாலுகா போலீஸார் வழக்குப்பதிவு செய்து ராபின்(26), சவேரியார்பாளையம் செல்வகுமார்(26), வெங்கட கிருஷ்ணன்(29) ஆகிய மூன்று பேரை கைது செய்தனர். சூர்யாவை தேடி வருகின்றனர்.

சமூக நீதி நலத்துறை என்பதை மீண்டும் ஆதிதிராவிடர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்ய

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நல கூட்டமைப்பின் சார்பில் நிறுவனத்தலைவர் சா.அருணன் கோரிக்கை



சட்டப்பேரவையில் நாளை ஆதிதிராவிடர் நலத்துறைமற்றும்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு அமைச்சர்கள் பதில் அளிக்க உள்ளனர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கீழ் இயங்கும் சமூக நல விடுதிகளில் மாணவர்களுக்கு தரமான உணவு வழங்குவதில் பல சிமங்கள் உள்ளது குறிப்பாக அரிசி சுத்தமாக சரியில்லாத நிலை மளிகை பொருள் , காய்கறி அளவு மிகவும் குறைவாக நிர்ணயம் செய்திருப்பது மெனு பிரகாரம் செய்வதில் குறைபாடுகள் ஏற்படுகிறது,இதனால்மாணவர்கள் விடுதிகளில் தங்கிபடிப்பதற்குஆர்வம் காட்ட தயங்குகிறார்கள் அரிசி மளிகை பொருள்களின் தரத்தை உயர்த்த வேண்டும் ,

ஆதிதிராவிடர் நலத்துறையில் அதிக ஆண்டுகள் பணியாற்றும் விடுதி காப்பாளர்களை மீண்டும் ஆசிரியர்களாக பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் மேலும் விடுதி காப்பாளர்களாக இளைஞர்களை நியமித்து மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் ,

ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டுத்தப்பட்ட நலத்துறை விடுதிகளில் மாணவர்கள் எண்ணிக்கைகுறைவாக உள்ள விடுதிகளை இரவு பாடச்சாலைகளாகவும் பகல் நேரங்களில் வேலை தேடும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக பயிற்சி மையங்களாகவும் அந்தந்த துறைகள் மூலம் மாற்றி அமைத்து ஏற்கனவே விடுதி பணியாளர்களை கொண்டு இரவில் வரும் மாணவர்களுக்கு சிற்றுண்டியும் , பகல் நேரங்க்களில் Airport வகுப்புற்கு வரும் இளைஞர். மதிய உணவும் அளிக்க வேண்டும்

விடுதிகளில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் கொண்டுவந்து பணி நிரந்தரம் செய்ய வேண்டும் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் பணியாற்றும் பணியாற்றும் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்களை பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இணைக்க வேண்டும் அப்போது தான் பணியிட மாற்றம் செய்யும்போது காலி பணியிடங்களை ஒரே நேரத்தில் கண்டறிந்து பூரத்தி செய்ய முடியும் மாணவர்களின் கல்வி கற்பதில் தொய்வு ஏற்படாது ஆதலால் ஆசிரியர் நலன் மாணவர் நலனை கருத்தில் கொண்டு பணியிடங்களை மட்டும் ஒன்றிணைக்க வேண்டும் ,ஊதியம்பெறஐ.எப.ஹச். ஆர்.எம்.எஸ்,என்ற தரவும் மற்றும் ஆசிரியர் கறியீடிற்கு எமிஸ் என்ற தரவும் இருப்பதால் பணியிடங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது , மேலும் வகுப்பறை, கழிவரை , சுத்திகரிப்பு செய்த குடிநீர்வசதி,சுற்றுச்சுவர் போன்றகட்டமைப்புவசதிகளை மேம்படுத்த வேண்டும் சமூக நீதி நலத்துறையின் பெயரை மீண்டும் ஆதிதிராவிடர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சமூக நீதி நலத்துறை அமைச்சர் அவர்களையும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நலத்ணமைச்சர் அவர்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக்கொள்கிறேன் சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு.

# நேபாள வெள்ளம்: பீஹாரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதலமைச்சர் சாம்ராட் சவுத்ரி வான்வழி ஆய்வு



பாட்னா: பிஹாரில் வெள்ளம் பாதித்த பகுதிகளை முதல்வர் சாம்ராட் சவுத்ரி ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு செய்தார்.

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக கோசி, திரிசூலி நதிகளில் வரலாறு காணாத வகையில் நேற்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கங்கையின் கிளை ஆறுகளான கோசி, கண்டக் ஆறுகள் நேபாளத்திலும், பிஹாரிலும் ஒடுகின்றன. இந்த ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகபிஹாரிலும்எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிஹாரில் வெள்ளம் பாதித்த பகுதிகளை முதல்வர் சாம்ராட் சவுதரி ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு செய்தார். இது தொடர்பாக சாம்ராட் சவுத்ரி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கை கருத்தில் கொண்டு பகஹா, வால்மீகி நகர், பெட்டியா, மோதிஹாரி உள்ளிட்ட பிஹாரின் எல்லைப் பகுதிகளில் வெள்ள நிலைமையை நான் வான்வழி ஆய்வு செய்தேன்.

தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மிக விரைவாக எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் அவர்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும்வழங்குவதும்மாநில அரசின் உயர் முன்னுரிமையாக உள்ளது. என தெரிவித்துள்ளார். வெள்ள பாதிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில், கண்டக் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணையின் 36 மதகுகளும் திறக்க ப்பட்டு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறவதாக பிஹார் மாநில நீர்வளத்துறைதெரிவித்துள்ளது. அத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "வால்மீகி நகரில் உள்ள கண்டக் தடுப்பணையில் இருந்து புதன்கிழமை இரவு 11 மணி அளவில் 1.50 லட்சம் கன அடியாக இருந்த நீர்வெளியேற்றம்,வியாழக்கிழமை காலை 1.04 லட்சம் கன அடியாக குறைந்துள்ளது. நேற்று அதிகரித்த நீர்மட்டம் இன்றுகுறையத்தொடங்கியது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.எனினும், கங்கை ஆற்றை ஒட்டியுள்ளபாட்னாவின் நக்தா தியாரா பகுதியில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். தங்களின் கால்நடைகள்,இருசககரவாகனங்கள் உள்ளிட்டவற்றுடன் அவர்கள் படகு மூலம் கங்கை ஆற்றைக் கடந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

# 37.5 டன் நிவாரணப் பொருட்களுடன் நேபாளம் சென்றது இந்தியாவின் 2வது விமானம்



புதுடெல்லி:வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்துக்கு இந்திய அரசு நேற்று 10 டன் நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் அனுப்பிவைத்த நிலையில் இன்று 37.5 டன் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நேபாளத்துக்காக 37.5 டன் நிவாரணப் பொருட்கள், மருந்துகள், உணவுப் பொட்டலங்களை ஏற்றிக்கொண்டு இரண்டாவது விமானம் புறப்பட்டுள்ளது. இந்தியா, நேபாள அதிகாரிகளுடன் நெருங்கிய, தொடர்ச்சியானதொடர்பில் உள்ளது.நிவாரணப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து வலுவான ஆதரவை அளிக்கும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று அவர் வெளியிட்ட பதிவில், "பேரழிவை ஏற்படுத்தி உள்ள வெள்ளப் பெருக்கால் நேபாளத்துக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் 10 டன் நிவாரணப் பொருட்கள் மற்றும் மருந்துகளை அனுப்பி உள்ளோம். உயிரிழந்த குடும்பங்களுடனும் பாதிக்கப்பட்ட அனைவருடனும் எங்கள் வருத்தங்களை பகிர்ந்துகொள்கிறோம். இந்த சவாலை எதிர்கொள்ள இந்தியா நேபாளத்துடனும் அதன் மக்களுடனும் துணை நிற்கிறது" என தெரிவித்திருந்தார்.

நேற்று அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை நேபாளத்துக்கான இந்திய தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா, நேபாளத்தின் கலாச்சாரம், சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கடக் ராஜ் பவுடலிடம் முறைப்படி ஒப்படைத்தார்.

மீட்புப் பணிகளை மேற்கொள்ள இந்திய தேசிய பேரிடர் மீட்புப் படையினர் நேபாளத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை இணை அமைச்சர்கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "எங்கள் தேசிய பேரிடர் மீட்புப் படை (என்டிஆர்எப்) குழுக்கள் ஏற்கனவே நேபாளத்தை அடைந்துவிட்டன. உயிர் பிழைத்தவர்களைப் பாதுகாப்பாக மீட்டு வரவும், காணாமல் போனவர்களைக் கண்டறியவும் சாத்தியமான அனைத்துமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எங்கள் என்டிஆர்எப் குழுக்கள் தேவையான அனைத்து கருவிகளுடன் அங்கு சென்றுள்ளன. நமது நட்பு மற்றும் அண்டை நாடுகள் இபோன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதெல்லாம், உயிர்களைக் காப்பாற்றுவது, உணவுப் பொருட்களை வழங்குவது, மருத்துவப் பொருட்கள் மற்றும் சிகிச்சையை உறுதி செய்வது என முழுமையான உதவியை அளிப்பதில் இந்தியா ஒருபோதும் சளைத்ததில்லை. அங்குள்ள மக்களுக்கு உதவ இந்திய அரசாங்கம் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

சில இந்தியர்களும் காணாமல் போயுள்ளனர். இது வருத்தம் அளிக்கிறது. நெருக்கடியை எதிர்கொள்ளும் நேபாளத்தில் உள்ள நமது சகோதர சகோதரிகள் குறித்து நாங்கள் சமமான அக்கறை கொண்டுள்ளோம். நேபாளத்துடன் இந்தியாவுக்கு நீண்டகால உறவு உள்ளது." என தெரிவித்தார்.

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் 175 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 300 இந்தியர்கள் உட்பட சுமார் 1000 பேரை காணவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடிக்கான பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ் முறை குறித்த கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்டம், டர்மரிக் ஹோட்டல் கூட்டரங்கில் மஞ்சள் சாகுபடிக்கான பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ் முறை குறித்த கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (27.08.2026) துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய வேளாண் பயிர்களில் மஞ்சள் முக்கிய இடம் வகிக்கிறது. மாவட்டத்தில் சுமார் 11,860ஏக்கர்பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் சுமார் 30 சதவீதமாகும். மேலும், பி.எஸ்.ஆர்.-2 மற்றும் ஈரோடு உள்ளூர் ஆகிய மஞ்சள் வகைகள் புவிசார் குறியீடு பெற்றுள்ளன. மாவட்டத்தில் சான்றிதழ் பெற்ற அங்கக மற்றும்சுற்றுச்சூழலுக்கு உகந்த மஞ்சள் சாகுபடி சுமார் 600 முதல் 950 ஏக்கர் வரை மட்டுமே உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அங்கக மஞ்சளுக்கான தேவை அதிகரித்து வருவதால்,அங்ககச் சான்றிதழ் பெறுவதன் மூலம் விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு கூடுதல் சந்தை வாய்ப்பையும், கூடுதல் விலையையும் பெற முடியும்.


நேற்றைய சூழலில் வேளாண்மையில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பது மிகவும் அவசியமாகும். மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடம் வேளாண்மை தொடர்பானவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம்.இயற்கை வேளாண்மையில் அவர்களின் ஆர்வத்தை அதிகரிக்க முடியும். இயற்கை வேளாண்மை குறித்த அறிவைப் பெறுவதுடன், அதனை நடைமுறையில் செயல்படுத்துவதும் முக்கியமாகும். இயற்கையோடு இணைந்து, பருவநிலையைப் புரிந்துகொண்டு வேளாண்மை மேற்கொள்ளும்போது, விவசாயிகளுக்கும் பயனளிப்பதுடன், சமூகத்திற்கும் பாதுகாப்பான மற்றும் தரமான உணவுப் பொருட்களை வழங்க முடியும். பங்கேற்பு உத்தரவாத சான்றிதழ் (PGS) முறையில் 5 முதல் 20 விவசாயிகள் குழுவாகஇணைந்து, பரஸ்பர ஆய்வு மற்றும் கண்காணிப்பு மூலம் குறைந்த செலவில் அங்ககச் சான்றிதழ் பெற முடியும். ஒரு விவசாயிக்கு சுமார் ரூ.500 மட்டுமே செலவாகும் என்பதால், சிறு மற்றும்குறுவிவசாயிகள் இவ்வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மானியங்கள் மற்றும் நிதியுதவிகளை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அங்ககச் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் நறுமணப் பொருட்கள் வாரியம் மூலம் சாகுபடி செலவில் 12.5 சதவீதம்,அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,500 வரையும், அங்ககச் சான்றிதழ் செலவில் 50 சதவீதம் வரையும் உதவி வழங்கப்படுகிறது. மஞ்சள் வேகவைக்கும் மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்களைப் பெற விவசாயிகள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு 50 சதவீத மானியம்,அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் வரை உதவி கிடைக்கிறது. இதனைப் பயன்படுத்தி மஞ்சளை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம்.

விவசாயிகள் விளைபொருட்களை உற்பத்தி செய்வதுடன் நின்று விடாமல், அவற்றை மதிப்புக்கூட்டி, உரிய முறையில் சந்தைப்படு த்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஈரோடு மாவட்டத்தில் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்களின் விளைபொருட்களுக்குசிறந்தசந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் கூட்டுறவு அமைப்பு போன்ற ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகள் இயற்கை மற்றும் அங்கக முறையில் தரமான மஞ்சளை உற்பத்தி செய்து, உரிய சான்றிதழ் பெற்று,மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதன் மூலம் கூடுதல் வருமானம் பெற முன்வர வேண்டும். ஈரோடு மஞ்சளின் தரம் மற்றும் சந்தை மதிப்பை மேலும் உயர்த்துவதுடன், மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என தெரிவித்தார். முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கருத்துக்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இப்பயிலரங்கில் வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.லோகநாதன், ஈரோடு துல்லிய பண்ணை நிறுவனர் முனைவர் வடிவேல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் இயக்குநர்கள், குழு உறுப்பினர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கான்பூரில் பயிற்சி விமானம் விபத்து; பைலட்டுகள் 2 பேர் பலி



கான்பூரில் கங்கை நதிக்கரையில் காலை பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், பயிற்சி விமானி மற்றும் பயிற்றுநர் ஒருவர் உயிரிழந்தனர்.

உத்தரபிரதேசம் மாநிலம் கான்பூரில் தனியாருக்கு சொந்தமான பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதில் பைலட்டுகள் 2 பேர் உயிரிழந்தனர். சுமார் 11:30 மணியளவில் கான்பூரில் இருந்து புறப்பட்டு, சுமார் 20 நிமிடங்களுக்குப் பிறகு கத்ரி பகுதியில் உள்ள நத்தாபூர்வா கிராமத்திற்கு அருகே வயலில் விழுந்து விபத்துக்குள்ளான இந்த விமானம், கர்க் ஏவியேஷன் என்ற தனியார் பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமானது என கூறப்படுகிறது.

கர்நாடகாவைச் சேர்ந்த அபிஷேக் புஜாரி என்ற பயிற்சி பைலட்டும், குஜராத்தைச் சேர்ந்த மிகவும் அனுபவம் வாய்ந்த பயிற்றுநர் சச்சின் பாட்டியா என்பவரும் உயிரிழந்திருப்பதாக விமானத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இது இரட்டை எஞ்சின் கொண்ட விமானம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தைத் தொடர்ந்து, ஆணையர் லால், கூடுதல் காவல் ஆணையர்கள் விபின் தடா மற்றும் சங்கல்ப் சர்மா, மற்றும் தலைமைத் தீயணைப்பு அதிகாரி தீபக் சர்மா ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த ஜூனில் காஸ்கஞ்ச் மாவட்டத்தில் இரண்டு சீட்டர் பயிற்சி விமானம்வயலில்விபத்துக்குள்ளானது. அதேபோல, கடந்த மே மாதம், மராட்டியத்தின் பாராமதியில்ரெட்பேர்ட்பிளைட் ட்ரெய்னிங் அகாடமிக்குச் சொந்தமான பயிற்சி விமானம் தரையிறங்கும் போது ஒரு கம்பத்தில் மோதி விபத்துக்கு ள்ளானது குறிப்பிடத்த க்கது.

# தூத்துக்குடியில் விவசாயி முகத்தில் ஸ்பிரே அடித்து 60 ஆடுகள் திருட்டு



தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தை சேர்ந்த விவசாயிகளான செல்வம், சண்முகம் ஆகியோர்ஆடுகள்வளர்த்து வருகின்றனர். இவர்களிடம் கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பில் இருந்து வருவதாக கூறிய 2 பேர், 60 ஆடுகளை ரூ.5 லட்சத்து 24 ஆயிரத்துக்கு வாங்க முன்பணம் ரூ.1,000 வழங்கினர்.

விவசாயி முகத்தில் ஸ்பிரே அடித்து 60 ஆடுகள் திருட்டு

இதையடுத்து செல்வம் 60 ஆடுகளுடன் சேத்தியாத்தோப்பு வந்தார். அங்கு ஆடுகளை வாகனத்தில் ஏற்றிய பின்னர் பணம் கேட்டபோது, முகத்தில் ஸ்பிரே அடித்து அவரை மயக்கமடையச் செய்த அந்த நபர்கள் ஆடுகளுடன் தப்பிச் சென்றனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் (27.08.2026 முதல் 29.08.2026 வரை) மாணவ, மாணவியர்களுக்கான CLAT நுழைவுத் தேர்வு உண்டு உறைவிடப் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (27.08.2026) துவக்கி வைத்தார்.

### ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி 2025, 2026 ஆம் கல்வி ஆண்டில்

## 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுத்தந்த ஆசிரியப் பெருமக்களை பாராட்டி பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், கலைமகள் கல்விநிலையம் கூட்ட அரங்கில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2025-26 ஆம் கல்வி ஆண்டில் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% சதவீதம் தேர்ச்சி பெற்று தந்த ஆசிரியப் பெருமக்களை பாராட்டி பாராட்டுச் சான்றிதழ்களை நேற்று (27.08.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வழங்கினார். 2025-26ஆம் கல்வியாண்டில்10-ம்வகுப்பு பொதுத்தேர்வில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 1,571 ஆசிரியர்கள் 100 சதவீத தேர்ச்சியைப் பெற்றுத் தந்து மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இன்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமூக அறிவியல் பாடத்தில் 100 சதவீத தேர்ச்சியைப் பெற்றுத் தந்த 245 ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். கடந்த கல்வியாண்டில் பெறப்பட்ட தேர்ச்சி விகிதத்தை விட வரும் கல்வியாண்டில் மேலும் அதிகளவில் 100 சதவீத தேர்ச்சியைப் பெறுவதுடன், பாடங்களின் சராசரி மதிப்பெண்ணையும் ஒருங்கிணைந்து செயல்பட உயர்த்திட ஆசிரியர்கள் அறிவுறுத்தினார். மேலும், வேண்டும் என மாணவர்களுக்கு பாடம் சார்ந்த கல்வி அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், சமூக அறிவியல் பாடத்தை அன்றாட சமூக வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி கற்பித்து, மாணவர்களின் சிந்தனை மற்றும் அறிவுத் திறனை விரிவுபடுத்திட வேண்டுமெனத் தெரிவித்தார். தொடர்ந்து, சித்தோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் CLAT நுழைவுத் தேர்வுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேற்று (27.08.2026) துவக்கிவைத்தார். இப்பயிற்சியானது 27.08.2026 முதல் 29.08.2026 வரை 3 நாட்கள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் மாணவர்கள் உயர்வான சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், பொதுச் சட்ட நுழைவுத் தேர்வின் (CLAT)

முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் உயர்கல்வி பயிலும் வாய்ப்புகள் குறித்தும், முன்னணி கல்வி நிறுவனங்கள் குறித்தும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இப்பயிற்சியில் 150 மாணவ, மாணவியர்கள் மற்றும் 20 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளி இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ரவிக்குமார், தலைமையாசிரியர்கள், கருத்தாளர்கள் மற்றும் குழுவினர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## காவல், தீயணைப்பு துறைகளுக்கு ரூ.164.64 கோடியில் புதிய கட்டிடங்களை முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்

காவல், தீயணைப்பு துறைகளுக்கு ரூ.164.64 கோடியில் புதிய கட்டடங்களை முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதல்-அமைச்சர் விஜய் இன்று தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 127 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 36 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 164 கோடியே 64 லட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்கவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்திறன் மேம்படவும், அத்துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கத்தில் 121 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 காவலர் மற்றும் தலைமைக் காவலர் குடியிருப்புகள்.

சென்னை மாவட்டம், துறைமுகத்தில் 2 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்;

சென்னை மாவட்டம், ஆவடி, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 5-ஆம் அணி வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல்பொருள் அங்காடி மற்றும் புனித தோமையார் மலை ஆயுதப்படை வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல்பொருள் அங்காடி.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஆயுதப்படை வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல்பொருள் அங்காடி, என மொத்தம் 127 கோடியே 76 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறைக் கட்டடங்களை தமிழ்நாடு முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள் சேலம் மாவட்டம் - செவ்வாய்பேட்டையில் 6 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - சமயபுரத்தில் 3 கோடியே 91 லட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல் மாவட்டம் - வெப்படையில் 2 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவிலும், பெரம்பலூர் மாவட்டம் - பெரம்பலூரில் 4 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவிலும், மதுரை மாவட்டம் - தே. கல்லுப்பட்டியில் 2 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் வாடிப்பட்டியில் 2 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவிலும், சிவகங்கை மாவட்டம் - சிங்கம்புணரியில் 2 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள். கோயம்புத்தூர் மாவட்டம் - பீளமேட்டில் 6 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான 15 குடியிருப்புகள் மற்றும் நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோட்டில் 4 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான 14 குடியிருப்புகள்.

கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையத்தில் 2 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான படைக் குடியிருப்பு, என மொத்தம் 36 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டடங்களை தமிழ்நாடு முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்.

## ‘கமிஷன் பணத்தை சமமாக பிரிப்போம்…’ கங்கை நீரை ஊற்றி சத்தியம் செய்த கவுன்சிலர்கள் உத்தரபிரதேசத்தில் பரவிய வீடியோவால் சர்ச்சை



உத்தர பிரதேச மாநிலத்தில் கடந்த சில தினங்களாக சமூக வலைதளங்களில் பரவி வரும் வீடியோ ஒன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. வீடியோ குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட வீடியோவில், ஷாஜகான்பூர் மாநகராட்சி கவுன்சிலர்கள் தங்கள் கைகளில் கங்கை நதியின் நீரை ஏந்திக் கொண்டு சத்தியம் செய்கின்றனர். அவர்கள் மாநாகராட்சி விவகாரங்கள் மூலம் கமிஷன் அல்லது சட்டவிரோதமான முறைகளில் தங்களுக்குகிடைக்கும் பணத்தை சரிசமமாக பங்கு பிரிப்போம் என்று உறுதி கூறுகின்றனர். , தங்கள் குழு எப்போதும் ஒற்றுமையாக இருக்கும் என்றும், குழுவில் உள்ள யாருக்காவது பிரச்சினை வந்தால் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் திரும்ப மாட்டோம் என்றும் அவர்கள் சத்தியம்செய்கின்றனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகபரவிய நிலையில், இந்த விவகாரம் பெரும் சர்ச்சையானது.

இதற்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. விசாரணை நடத்தப்பட வேண்டும் என மாவட்ட காங்கிரஸ் தலைவர் ரஜ்னீஷ் குப்தா வலியுறுத்தியுள்ளார். இந்த விவகாரம் குறித்து மாவட்ட கலெக்டருடன் ஆலோசிக்கப்படும் என்றும், குறிப்பிட்ட வீடியோ காட்சி தொடர்பான உண்மைகளைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும் எனவும் நகராட்சி ஆணையர் சவுமியா குரு ராணி தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்பதே முதல்வர் விஜய்யின் விருப்பம்; திருமாவளவன் பேட்டி

சென்னை: சட்டமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்று முதலமைச்சர் விஜய் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார் என வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சமூக நீதித்துறை மீதான மானிய கோரிக்கை விவாதம் சட்டமன்றத்தில் இன்று நடைபெற்றது. முன்னதாக, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், மக்களவை உறுப்பினருமான தொல் திருமாவளவன், சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசு ஆகியோர் சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் செய்தியாளரிடம் பேசிய வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன், "'கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம், எளிய மக்களுக்கும் அதிகாரம்' என்கின்ற கொள்கை முழக்கத்தோடு 1999 நாடாளுமன்ற பொது தேர்தலின்போது விடுதலை சிறுத்தைகள் கட்சி, தேர்தல் அரசியல் களத்தில் அடி எடுத்து வைத்தது.

கால் நூற்றாண்டு காலம் மேற்கொண்ட கடும் பயணத்தின் விளைவாக இன்று ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்க கூடிய அரிய வாய்ப்பை தமிழ்நாடு மக்கள் எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். கூட்டணி அரசு தமிழ்நாட்டில் வளர வேண்டும் என்பதை உரக்கப் பேசி வந்த வி.சி.க. இன்றைக்கு அந்த இடத்தை எட்டி இருக்கிறது. முதலமைச்சர் விஜய் கூட்டணி அரசு அமைவதாக தேர்தலுக்கு முன்பே



வெளிப்படையாக அறிவித்தார்.

அதன்படி இன்றைக்கு அமைச்சரவையில் வி.சி.க. அங்கம் வகிக்கின்ற வாய்ப்பை அவர் வழங்கி இருக்கிறார். சமூக நீதித்துறை அமைச்சராக வி.சி.க.வின் துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு பொறுப்பேற்று இன்றைக்கு முதன்முதலாக சமூக நீதித்துறைக்கான கொள்கை முழக்க அறிவிப்பை செய்கிறார்.

இதன் மூலம், விளிம்பு நிலை மக்களின் கனவை நனவாக்கும் ஒரு வாய்ப்பை அமைச்சர் வன்னி அரசு பெற்று இருக்கிறார். அந்தவகையில் இந்த நாள் இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நாளாக அமைந்திருக்கிறது. இந்த வாய்ப்பு தமிழ்நாடு மக்கள் அளித்துள்ள வாய்ப்பு. முதலமைச்சர் விஜய் அளித்துள்ள வாய்ப்பு. ஆகவே மக்களுக்கும் முதலமைச்சருக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்" என்று தெரிவித்தார்.

மேலும், சட்டமன்ற நிகழ்வுகள் தொடர்பான கேள்விக்கு, "சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்பதுதான் முதல்வர் விஜய்யின் எதிர்பார்ப்பு. அண்மையில் அவரை சந்தித்தபோது, சட்டசபையில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளிப்படுத்தினார்" என்று தெரிவித்தார். தொடர்ந்து, அமைச்சராக வன்னி அரசு செயல்பாடு பற்றி செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "நிறை குறைகள் இருக்கத்தான் செய்யும். அதில் பெரும்பான்மையாக அமைச்சர் வன்னி அரசை பாராட்டி பலரும் ஊக்கப்படுத்தி வருகிறார்கள். சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் அவருடைய பணிகள் பலராலும் இன்றைக்கு வரவேற்கப்படுகிறது. ஆட்சிக்கு வந்து 100 நாட்களை முடித்து இருக்கின்ற நிலையில், எஞ்சியுள்ள ஆண்டுகளில் குறைகளை கண்டறிந்து களைவதற்குரிய முயற்சிகளை இந்த தமிழ்நாடு அரசும் மேற்கொள்ளும். குறிப்பாக அமைச்சர் வன்னி அரசும் மேற்கொள்வார். பொதுமக்களுடைய கோரிக்கை என்னவோ அந்த கோரிக்கையை நிறைவேற்றுவது தான் இந்த அரசின் நோக்கம் என்று முதலமைச்சர் விஜய் சொல்லி இருக்கிறார். புதிதாக விமான நிலையம் அமைப்பதற்குரிய ஏற்பாடுகளையும்செய்து வருகிறோம் என்ற தகவலையும் முதலைச்சர் விஜய் சொல்லி இருக்கிறார். ஆகவே, பரந்தூர் விமான நிலையத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்கின்ற கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன் என்று திருமாவளவன் கூறினார்.

## ‘Not as big as it’s made out to be': Nepal foreign minister Shishir Khanal on border row with India

*Downplaying the border row with India, Nepal's foreign minister Shisir Khanal on Thursday noted that neighbours will have 'boundary problems' and also implied that the issue was being blown out of proportion, stating that it is "not as big as it is made out to be".*

*"Only neighbours will have boundary problems. If you're not a neighbour, you would not have that problem. I mean, we have very open borders. It's unique in the*



*world. People can just walk without any paper, pretty much," Khanal said at an NDTV event as he acknowledged that there are "some issues"*

*"But obviously, there are some issues. It's not as big as it's often made out in narratives. Most of these are between Nepal and India and there are many different mechanisms, and among them is one area of boundary and border management as well," Khanal noted. Track live updates on Nepal floods*

*A border dispute between India and Nepal erupted earlier this year linked to the Lipulekh Pass, located in Uttarakhand's Pithoragarh district, with Kathmandu renewing its territorial claim over Lipulekh. It also sought dialogue with New Delhi to resolve the issue.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.